بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**நாம் குறிப்பாக இந்த துஆவும் செய்ய வேண்டும். இந்த ரமலான் நம்மை முழுமையாக தீமைகளில் இருந்து விடுதலை பெற்று தருவதாகவும் நன்மைகளை முழுமையான கலப்பின்மையுடன் நிறைவேற்றும் வாய்ப்பு தந்தவாறு நம்மை விட்டு செல்ல வேண்டும். நாம் உண்மையான தக்வாவின்படி செல்பவர்கள் ஆக வேண்டும். நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய தோற்றத்தின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்கள் ஆக வேண்டும்.**

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 17.07.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ரமலான் மாதம் நிறைவடைந்து கொண்டிருக்கிறது. இன்று சில இடங்களில் கடைசி நோன்பாக இருக்கலாம். சில இடங்களில் நாளை நோன்பாக இருக்கும். இவ்வாறு அல்லாஹ்வுடைய கூற்றிற்கேற்ப எண்ணப்பட்ட சில நாட்கள் கழிந்து விட்டன. நம்மில் பெரும்பாலார் இந்த நாட்களில் இருந்து பயன்பெற்றிருப்பார்கள். சிலருக்கு இந்த நாட்களில் புதிய அனுபவங்கள் கிடைத்திருக்கும். இப்போது இந்த அருள்கள் ஆன்மீக அனுபவங்கள் நமது வாழ்வின் அங்கமாக வேண்டும் என்பதே நமது துஆவும் முயற்சியுமாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் பக்கம் எடுத்து வைக்கப்படுகின்ற நமது அடி இவ்விடத்தில் நின்றுவிடக்கூடாது. மாறாக, நிரந்தரமாக முன்னேறிக் கொண்டிருக்கக்கூடிய அடியாக இருக்க வேண்டும். ஒவ்வொரு அடியும் எண்ணற்ற அருட்களை அருகில் கொண்டு வருகிற அடியாக இருக்க வேண்டும்.

இன்று ரமலானின் கடைசி ஜுமுஆவும் ஆகும். நம்மில் பெரும்பாலார் அல்லாஹ்வின் அருளால் மிகவும் பேணுதலுடன் ஜுமுஆ தொழுபவர்கள் ஆவர். ஆனால் நம்மில் சிலர் கடைசி ஜுமுஆவுக்கு மிகவும் முக்கியத்துவம் தருபவர்களாக இருக்கின்றனர். உலகில் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் பரவிவிட்டது. பல்வேறு பிரிவை சார்ந்த மக்கள் ஜமாஅத்தில் இணைகின்றனர். பழைய தர்பிய்யத்தின் தாக்கமும் கூட அவர்களிடம் இருக்கும். சிலர் பொதுவாக வருடம் முழுவதும் ஜுமுஆவுக்கு அவ்வளவு முக்கியத்துவம் தருவதில்லை. ஆனால் ரமலானில் கடைசி ஜுமுஆவுக்கு மிகவும் முக்கியத்துவம் தருகின்றனர். முஸ்லிம்களிடம் நிலவுகின்ற பொதுவான பழக்கத்தின் காரணத்தால் ஜுமுஅத்துல் விதா என்ற பெயரில் முஸ்லிம்களிடம் பரவலாக பிரபல்யமாகியுள்ள இந்த ரமலானில் கடைசி ஜுமுஆவில் கலந்து கொள்வதன் மூலம் கடந்த வருடத்தின் அனைத்து தீமைகள் மற்றும் பலஹீனங்களில் இருந்து விடுதலை கிடைக்கும். முழு வருடத்தின் இபாதத்துகளின் கடமையும் கூட இந்த ஜுஆவில் கலந்து கொள்வதன் மூலம் நிறைவேறிவிடும் என கருதுகின்றனர். இத்தகையோர் ஒரு சிலரேயாயினும் அவர்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகின்றேன். அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இந்த ஜுஆவில் கலந்து கொள்வதால் மட்டும் நமது வாழ்வின் நோக்கம் நிறைவேறாது. அல்லாஹ்வின் வார்த்தைகளில் அல்லது நபி (ஸல்) அவர்களுடைய வழிகாட்டல்களிலிருந்து நிரூபணமாவதாவது ரமலானின் கடைசி ஜுமுஆவை தொழுதால் மட்டும் ஈடேற்றத்திற்கு காரணமாகிவிடாது.

எனவே மனிதன் ஈடேற்றம் பெற விரும்பினால் இதில் கலந்து கொள்வதால் உலகமும் மறுமையும் கிடைத்துவிடும் என்பதல்ல. எனவே நமது இளைஞர்களுக்கும் ஜுமுஆ தொழுவதில் நம்மில் சோம்பல் காட்டுபவர்களும் நினைவில் கொள்ள வேண்டும். அஹ்மதி அல்லாதவரிடம் ஜுமுஆத்துல் விதா பற்றி ஒரு கற்பனை இருந்தால் இருக்கட்டும். அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பொறுத்தவரை அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களுடைய போதனைக்கேற்ப ஜுமுஅத்துல் விதா குறித்து எந்த ஒரு நிலைபாடும் இல்லை. இருக்கவும் கூடாது. ஆம்! இன்று ஜுஆவில் கவனமான முறையில் கலந்து கொள்பவர்களின் உள்ளத்தில் இவ்வாறு நான் ஜுஆவில் கலந்து கொள்வதில் ஏற்பட்டு இருந்து எனது பலஹீனங்களை இன்றோடு விட்டுவிடுவேன். வருங்காலத்தில் ஜுமுஆவில் மிக பேணுதலுடன் கலந்து கொள்வேன் என்ற எண்ணம் இருக்கும் என்றால் நிச்சயமாக இந்த ஜுமுஆவுக்கு முக்கியத்துவம் இருக்கும். அதுமட்டுமல்ல. அந்த நாளுக்கும் முக்கியத்துவம் உண்டு. அந்த ஜுமுஆ மட்டும் அம்மனிதருக்கு அருளுக்குரியதாக இருக்காது. மாறாக, அந்த தூய மாற்றத்தின் காரணத்தால் தூய மாற்றம் அம்மனிதரிடம் ஏற்பட்ட அந்த விநாடி அதாவது நான் அல்லாஹ்வின் கட்டளைக்கு முக்கியத்துவம் தருவேன். அதில் நிலைநிற்பேன் என்று எண்ணம் ஏற்பட்ட அந்த வினாடி அல்லது நாள் அம்மனிதருக்கு ஒரு லைலதுல் கத்ர் ஆகிவிடுகிறது.

அந்த நாள் அல்லது நொடி அவருக்கு லைலத்துல் கத்ர் ஆகிவிடுகிறது. ஓர் இருள் நிறைந்த இரவுக்குப் பிறகு ஆன்மீக வெளிச்சத்திற்கான ஏற்பாடு உருவாகி விடுகிறது. நான் கடந்த குத்பாவில் கூறியது போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். மனிதனுக்கு ஒரு லைலத்துல் கத்ர் அவன் தூய்மையடையக்கூடிய நேரமும் ஆகும். அதாவது அம்மனிதர் தனக்குள் ஒரு தூய மாற்றத்தை உருவாக்கி அல்லாஹ்வின் முன் குனிகிறார். அவனது கட்டளைகளை அமல் செய்வதற்காக உறுதி எடுக்கிறார். அதில் நிலைத்து நிற்கிறார்.

ஜுமுஆவின் முக்கியத்துவம் குறித்து அல்லாஹ் தஆலா என்ன வழிகாட்டல் வழங்கியுள்ளான் ? நான் ஓதிய முதல் வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். நம்பிக்கை கொண்டவர்களே! ஜுமுஆ நாளின் ஒரு பகுதியில் தொழுகைக்காக அழைக்கப்பட்டால் அல்லாஹ்வை ஸிக்ர் செய்வதற்காக விரையுங்கள். உங்கள் வியாபாரங்களை விட்டு விடுங்கள். நீங்கள் அறிந்திருப்பின் இது உங்களுக்கு மிகச்சிறந்ததாகும்.

பிறகு அடுத்த வசனத்தில் கூறுகிறான். நீங்கள் தொழுது முடித்து விட்டால் அல்லாஹ்வின் அருளை தேடும் பொருட்டு பூமியில் பரவிச் செல்லுங்கள். அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுங்கள். அதன் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம். ஆகவே அல்லாஹ்தஆலா எல்லா உலகியல் வேலைகளையும் விட்டுவிட்டு ஜுமுஆவிற்கு வருவதையும் உள்ளத்தில் இறையச்சத்தை உருவாக்குவததையும் குறித்து கவனமூட்டி உள்ளான் என்பது தெளிவாகிறது.

அல்லாஹ் இந்த வசனத்தில் ரமலானின் ஜுமுஆ ரமலானின் கடைசி ஜுமுஆ ஆகியவற்றில் கலந்து கொள்வது பற்றி வழிகாட்டல் வழங்கவில்லை. மாறாக, எந்த குறிப்பான சுட்டிக் காட்டலும் இன்றி ஜுமுஆ தொழுகையின் முக்கியத்துவம் குறித்து கவனமூட்டியுள்ளான் கூறுகின்றான். அதுபோன்று ஜுமுஆவுக்கு தாமதமாக வருபவர்களும் யோசிக்க வேண்டும். தமது வேலைகளை ஒதுக்கும் போது குறிப்பிட்ட நேரத்துக்கு முன் ஒதுக்க வேண்டும்.

திருக்குர்ஆனில் அல்லாஹ்வோ, பெருமானார் (ஸல்) அவர்களோ, ரமலானின் கடைசி ஜுமுஆ தான் முக்கியத்துவம் வாய்ந்தது என்று எங்கும் கூறவில்லை. மாறாக, எல்லா ஜுமுஆவையுமே முக்கியத்துவம் வாய்ந்தது என்றே கூறியுள்ளார்கள். மாறாக, ஒரு ஹதீஸில் உள்ளது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். முஸ்லிம்களே! ஜுமுஆ நாளை இறைவன் உங்களுக்கு பெருநாளாக ஆக்கியுள்ளான். எனவே, அந்நாளில் நீங்கள் நல்ல பேணுதலுடன் குளித்து அதற்காக தயாராக ஆகுங்கள். ஒவ்வொரு ஜுமுஆவுக்கும் இந்த முக்கியத்துவம் உண்டு. அதற்காக நீங்கள் கவனத்துடன் பேணுதல் வேண்டும். எல்லா வேலைகளையும் விட்டுவிட வேண்டும். எல்லா தொழில்களில் இருந்தும் விடுப்பு எடுத்து விட வேண்டும். மேலும் பள்ளிக்கு ஜுமுஆவுக்காக செல்ல வேண்டும். ஹதீஸில் இருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது. பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வளவு தெளிவாக இதன் முக்கியத்துவத்தை கூறியுள்ளார்கள்.

ஒரு முஃமினுடைய ஈமானிய தரத்தை உயர்த்த ஒவ்வொரு முஃமினுக்கும் ஜுமுஆ தொழுகை கடமையாகும் என்று ஹதீஸின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்ல. இதன் எதிரிடை அம்சங்களையும் எச்சரிக்கைகளையும் விடுத்துள்ளார்கள். வேண்டுமென்றே ஜுமுஆவை விட்டு விடுபவரின் உள்ளம் நன்மைகளை செய்வதை விட்டும் முற்றிலுமாக அடைபட்டு விடுகிறது. ஆகவே இது மிகவும் அஞ்சத்தக்க இடமாகும். அசட்டை காட்டுபவர்கள் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். எந்த காரணமுமில்லாமல் சோம்பல் காட்டுவதை விட வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட காரணமென்றால் சரி. அனுமதிக்கப்பட்ட காரமில்லாமல் ஒருவர் வரவில்லை எனில் பிடிக்கப்படுவார். அனுமதிக்கப்பட்ட காரணம் இன்றி ஜுமுஆவை விடுவது தடுக்கப்பட்டதாகும். அந்த அனுமதிக்கப்பட்ட காரணங்களையும் ஹஸ்ரத் நபி (ஸல) அவர்கள் யார் யாருக்கெல்லாம் ஜுமுஆவை விட அனுமதி உள்ளதென்று தெளிவாக்கி விட்டார்கள். ஒவ்வொரு மனிதரும் ஜமாஅத்துடன் சேர்ந்து ஜுமுஆ தொழுவது கடமையாகும். நான்கு வகையினரைத்தவிர. விலக்கு அறிவிக்கப்பட்ட நால்வர் யாரென்றால் 1. அடிமை 2. பெண்கள் 3. குழந்தைகள் 4. நோயாளிகள் ஆவர். இதுவே இஸ்லாத்தின் அழகிய போதனை. நிர்பந்தத்திற்கு உள்ளானவர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட காரணங்களை உடையவர்கள் அதாவது அடிமை பெண்கள், குழந்தைகள், நோயாளிகள் போன்றோர் ஜுமுஆவுக்கு வரவில்லை எனில் அவர்களின் உள்ளங்களும் கூட கருமை ஆகிவிடும் என்பதன்று. இவர்கள் விலக்கு அளிக்கப்பட்டவர்கள். இத்தகையோரின் உள்ளங்களிலும் கூட முத்திரையிடப்படும் என்று கூறப்படவில்லை.

அல்லாஹ் தஆலா அதனைவிட சிறந்த ஏற்பாட்டை செய்து விட்டான். நான் ஜுமுஆவுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பதனை கவனத்தில் கொண்டால் பிறகு சில கடுமையான நிலைகளில் ஜுமுஆ கிடைக்காமல் போகிறது என்று துஆவும் செய்து வந்தால் வேதனைமிக்க உள்ளத்துடன் செய்யப்படும் துஆக்களை அல்லாஹ் தஆலா ஏற்றுக் கொண்டவாறு ஏற்பாடும் செய்து விடுகிறான். எளிமையையும் ஏற்படுத்து விடுகிறான். எவ்வாறிருப்பினும் இந்த நான்கு விதிவிலக்குகளை பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இவர்களைத் தவிர ஒவ்வொருவரும் ஜுமுஆ தொழுகைக்கு வருவது கடமையாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஐந்து வேளை தொழுகைகள், ஒரு ஜுமுஆ அடுத்த ஜுமுஆ வரை, ரமலான் அடுத்த ரமலான் வரை உள்ள பாவங்களுக்கு பரிகாரமாகி விடுகின்றது. மனிதன் பெரும் பெரும் பாவங்களில் இருந்து விலகி இருக்கும் வரை. இதுவே பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்காக காட்டிய வழிகாட்டல். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஐந்து வேளை தொழுகை என்று கூறி ஐந்து வேளை தொழுகைகளும் உங்களுக்கு கடமையாகும் என்று கவனமூட்டினார்கள். அவற்றை அல்லாஹ் தஆலா எல்லா நிபந்தனைகளுடன் சேர்த்து தொழுவது அவர் மீது கடமையாகும். அதுபோன்று ஜுமுஆவின் பக்கமும் கவனமூட்டினார்கள். ஜுமுஆவில் கலந்து கொண்டு, அதன் பரக்கத்துகள், இமாமின் குத்பா ஆகியவை மூலம் உங்களுக்குள் உருவான நன்மைக்கான உணர்வை அடுத்த ஜுமுஆ வரை நிலை நிறுத்த வேண்டும். கூறப்பட்ட விஷயங்களை அமல் செய்ய முயற்சிக்க வேண்டும். இது நடந்தால் ஒரு ஜுமுஆவில் இருந்து அடுத்த ஜுமுஆ வரை தீமைகளில் இருந்து விடுதலை செய்விக்கும். உங்கள் பாவத்திற்கான மன்னிப்புக்கு ஏற்பாடு செய்யும். இங்கு கூட ஒரு ஜுமுஆவிலிருந்து அடுத்த ஜுமுஆ வரை என்று கூறி ஒவ்வொரு ஜுமுஆவின் கட்டாயத்தன்மை மற்றும் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தி விட்டார்கள்.

இதுபோன்று ரமலானின் முக்கியத்துவத்தையும் கூறி உள்ளார்கள். நன்மையின் பக்கம் நிலை நிற்பது, தொடர்ந்து நிற்பது மனிதனை பாவத்தில் இருந்து பாதுகாக்கிறது. எனவே தொழுகையின் உரிமைகளை நிறைவேற்றுவதும் அவசியமாகும். ஜுமுஆவை ஒழுங்காக நிறைவேற்றுவதும் அவசியமாகும். ரமலானிலும் அதன் நிபந்தனைகளுடன் சேர்த்து அருளைப் பெறுவதும் பாங்களுக்கு பரிகாரமாகி விடுகிறது. நன்மைகளில் வளரச் செய்கிறது. இந்த நிபந்தனைகளை அல்லாஹ் ரமலானின் நோன்புகளில் அல்லாஹ் வைத்துள்ளான்.

உண்மையான தக்வாவின்படி நடப்பதாயின் இவற்றை எவ்வாறிருப்பினும் பேண வேண்டும். இறைவனது நெருக்கத்தைப் பெற வேண்டும் எனில் இவற்றை பேண வேண்டும். பாவமன்னிப்பிற்கான ஏற்பாது செய்ய வேண்டும் எனில் அல்லாஹ் தஆலா வழியை கூறிவிட்டான். அதற்கேற்ப அமல் செய்ய வேண்டும். இவற்றிற்காக அல்லாஹ் நமக்கு ஒரு தினசரி செயல் திட்டமும்

தந்துள்ளான். ஒரு வாராந்திர செயல் திட்டமும் தந்துள்ளான். ஒரு வருடாந்திர செயல் திட்டமும் தந்துள்ளான். அவை மனிதனின் ஆன்மீக சீர்திருத்தத்திற்கு அவசியமாகும். இந்த படித்தரங்களை கடந்து எவர் முன்னேறுவாரோ அவர் இறைவனது மன்னிப்பை பெறுபவராவார். ஜுமுஆ வின் முக்கியத்துவம் மிகவும் வெட்டவெளிச்சமாக தெளிவாகிவிட்டது. வருடத்திற்குப் பிறகு ஆன்மீக முன்னேற்றத்திற்கான திட்டத்தில் இறைவன் ரமலான் மாதத்தை வைத்துள்ளான். ஒரு வருடத்திற்கு ஒரு முறை ஜுமுஆ தொழுமாறு ரமலானில் ஜுமுஅத்துல் விதாவை வைக்கவில்லை.

ஜுமுஆவின் பரக்கத்தில் இருந்து அருள் பெறுவதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு 7 நாளுக்குப் பிறகும் வரக்கூடிய ஜுமுஆவையே முக்கியமான, மன்னிப்பிற்கான வழியாக கூறியுள்ளார்கள். ஆகவே ஒவ்வொரு வரக்கூடிய ஜுமுஆவும் நம்மை பொறுத்தவரை சாட்சி கூறுவதாக அமைய வேண்டும. அல்லாஹ்வின் பயத்துடன் இவர் இந்நாளை கழித்தார். இறைவனை கோபப்படுத்தக்கூடிய எந்த அமலும் செய்யவில்லை. அல்லது இறைவனது கோபத்துக்கு காரணமாக அமையக்கூடிய எந்த ஓர் அமலையும் வேண்டும் என்றே செய்யவில்லை என்று சாட்சி கூற வேண்டும். பிறகு அல்லாஹ் தஆலா சிறு சிறு தவறுகளை, குறைகளை மன்னித்து விடுகிறான். ஒவ்வொரு ஜுமுஆவும் பொதுவாகவே இந்த அடியான் பயந்து பயந்து பகலை கழிக்க முயன்றார் என்று அல்லாஹ்வின் முன் சாட்சி கூற வேண்டும்.

பிறகு ஜுமுஆவின் முக்கியத்துவம் மற்றும் அழகு குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறினார்கள். நாட்களில் மிகச் சிறந்த நாள் ஜுமுஆவின் நாளாகும். அந்த நாளில் அதிகமாக என் மீது தரூது அனுப்புங்கள். அந்த நாளில் உங்கள் தரூதுகள் என் முன் எடுத்து வைக்கப்படுகின்றன. ஆகவே இது ஜுமுவுடைய இன்னொரு தொடரும் அருள் ஆகும். ஜுமுஅத்துல் விதா தான் தரூது (அதாவது ஸலவாத்து) எடுத்து வைக்கப்படும் என்று எங்கும் வரவில்லை. மாறாக, ஒவ்வொரு ஜுமுஆவுக்கும் எடுத்து வைக்கப்படுகிறது. இந்த அருளில் இருந்து பயன் பெறுபவர் நற்பேறு பெற்றவர் ஆவார். அந்த தரூது அனுப்புபவருடன் சேர்ந்து அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகின்றனர்.

ஆகவே, இன்றைய இந்த நாளை முக்கியமானதாக ஆக்க வேண்டும் என்றால் இந்த அடிப்படையில் முக்கியமானதாக ஆக்க முயற்சிக்க வேண்டும். இன்று அல்லது நாளை ரமலானின் இபாதத்திலிருந்து நீங்கள் வெளிவந்து விடுவீர்கள். ஆனால் ஜுமுஆ தொழுகையில் இருந்து ஒரு வருடத்திற்கு வெளியே போய் விட முடியாது. மாறாக, அடுத்த ஜுமுஆ கூட இந்த ஜுமுஆ போன்றே முக்கியமானதாக உள்ளனது. எந்த பலஹீனங்கள், குறைகள் நமது இறந்த காலத்தில் இருந்தனவோ வரங்காலத்தில் அதனை அகற்ற உறுதிமொழி எடுக்க வேண்டும். இந்த சிந்தனை இருக்கும் எனில் நாம் ஜுமுஆவுக்கு விடை கொடுக்க மாட்டோம். மாறாக, நமது தீமைகள், பலஹீனங்கள், தவறுகள், சோம்பல்கள் ஆகியவற்றிற்கு விடை கொடுத்தவாறு அவற்றிலிருந்து நிரந்தரமாக தப்புவதற்கு இறைவனது அடைக்கலத்தில் வருவதற்கு முயற்சி செய்வோம். ரமலானின் பரக்கத்தில் இருந்து பலன் பெறுவது இதுதான். அதாவது எந்த நன்மைகளை செய்ய நமக்கு ரமலானில் வாய்ப்பு கிடைத்ததோ அவற்றில் நாம் மேலும் அதிகரிப்பை ஏற்படுத்தினாலோ இல்லை குறைந்த பட்சம் அதில் நிலைநின்றால் நாம் அடுத்த ரமலானை வரவேற்கலாம்.

நாம் ஜுமுஆவை வழியனுப்பி வட்டோம் என்ற சிந்தனை கொண்டவர்களாக இருக்கக் கூடாது. நாம் ரமலானை விடை கொடுத்து விடுவோம் என்ற சிந்தனை கொண்டவர்களாகவும் இருக்கக் கூடாது. நமது இபாதத்துகளை விடை கொடுத்து விட்டோம் என்ற எண்ணமும் வரக்கூடாது. இந்த சிந்தனை ஒருவரது உள்ளத்தில் உருவாகும் எனில் அவர் தமது பிறப்பின் நோக்கில் இருந்தும் விலகிவிடுகிறார். பிறப்பின் நோக்கத்தில் இருந்து விலகியவர் தக்வாவில் இருந்து விலகியவராவார். தக்வாவில் இருந்து விலகியவர் இறைவனது அருள்களை பெறுபவராக இருக்க முடியாது. நாம் ரமலானில் எதையெல்லாம் பெறுவதற்கு முயற்சி செய்திருந்தோமோ அதனை நாமே வீணாக்கியும் விட்டோம்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஜுமுஆ நாளில் ஒரு நேரம் வருகிறது. அப்போது துஆ ஒப்புக் கொள்ளப்படுகிறது. அது குறித்து நான் கூறிவிட்டேன். நாம் குறிப்பாக இந்த துஆவும் செய்ய வேண்டும். இந்த ரமலான் நம்மை முழுமையாக தீமைகளில் இருந்து விடுதலை பெற்று தருவதாகவும் நன்மைகளை முழுமையான கலப்பின்மையுடன் நிறைவேற்றும் வாய்ப்பு தந்தவாறு நம்மை விட்டு செல்ல வேண்டும். நாம் உண்மையான தக்வாவின்படி செல்பவர்கள் ஆக வேண்டும்.

நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய தோற்றத்தின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்கள் ஆக வேண்டும். இஸ்லாமிய போதனைகளை நமது வாழ்வின் அங்கமாக்கியவாறு இந்த மார்க்கம் தான் அடியாரை உயிருள்ள இறைவனுடன் இணைக்கிறது என்ற இத்ந அழகிய போதனைகளை உலகிற்கும் எடுத்துக் கூற வேண்டும். இந்த மார்க்கம் தான் ஒருவர் மற்றவரின் உரிமைகளை தருவது குறித்து மிகச் சிறந்த முறையில் வழிகாட்டுகிறது. கவனமூட்டுகிறது. அல்லாஹ் தஆலா நமக்கு அதற்கான வாய்ப்பைத் தருவானாக. மேலும் துஆ செய்யுங்கள். துன்பத்தில் இருக்கும் எல்லா அஹ்மதிகளையும் துன்பங்களில் இருந்து வெளி கொண்டு வருவானாக. எந்த வகையான சிக்கல்களில் மாட்டியிருந்தாலும் அதனை விட்டு அகற்றுவானாக. அதுபோன்று முஸ்லிம் சமுதாயத்திற்கும் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு துக்கங்களில் இருந்தும் பிரச்சனைகளில் இருந்தும் வெளிவர வாய்ப்புத் தருவானாக. ஒருவர் மற்றவருக்கு அநீதி இழைக்கின்றார். அவர்களின் கைகளை அநீதி இழைப்பதிலிருந்து அல்லாஹ் தடுப்பானாக. இஸ்லாம் தனது உண்மையான மகிமையுடன் ஒவ்வொரு முஸ்லிம் நாடுகளில் இருந்தும் உலகின் முன் வெளிப்படட்டுமாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 17.07.2015
Tamil Translation : Muallim. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516